**மீன்பிடி வெகுமதி நிதியம் - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

மீன்பிடி வெகுமதி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 1996 இன் 02 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுத்துரைக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நான் எனது கணக்காய்வை மேற்கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையிலுள்ள இந்நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவின் கீழ் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாதுள்ளது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியம் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

---------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக்

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு நிதியத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள்

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு

போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவனத்திற்கான தேவைப்பாடாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 மாவட்ட அலுவலகங்களினால் 05 முடிவடைந்த வழக்குகள் தொடர்பில் விற்பனை செய்யப்பட்டிருந்த வழக்குப் பொருட்களின் பெறுமதி ரூபா 308,915 தொகை நிதியத்தின் வருமானமாக கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | மாவட்ட மீன்பிடி அலுவலகங்களினால் அவ்வாறான தொகையொன்று 2019 ஆம் ஆண்டில் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய வருமானங்களை சரியாக கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து 2019 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 9,607,333 தொகையிலிருந்து வெகுமதி படியாகவும் திரட்டிய நிதியத்திற்கும் ரூபா 5,870,700 செலுத்தப்பட்டிருந்ததுடன், எஞ்சிய ரூபா 3,736,633 தொகை செலுத்த வேண்டியதாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் குழுத் தீர்மானங்களின் படி கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வழக்குகளிற்குரிய தொகைகளை மாத்திரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் பொதுவான நடைமுறையாகும். | செலுத்த வேண்டிய மொத்தத் தொகையினை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து 2019 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த தொகை ரூபா 9,607,333 ஆன போதிலும், செயலாற்றல் அறிக்கையின் படி 2019 ஆம் ஆண்டில் கிடைத்த தொகை ரூபா 6,148,395 ஆகக் காண்பிக் கப்பட்டிருந்தமையால் ரூபா 3,458,938 வேறுபாடு தொட | 5,432,846 | மீன்பிடி அலுவலகங்களினால் செலவு வைக்கப் பட்ட வருமான விபரங்கள் | வேறுபாடு தொடர் பில் பதிலளிக்கப் படவில்லை. நீதிமன்றங்களிலிருந்து அத்தொகையினை மீளளிப்பதற்கு நிண்டகாலம் எடுத்தல் இதற்கான காரணமாகும். | முடிவடைந்த வழக் குகள் தொடர்பில் நீதிமன்றங்களிலிருந்து பெறவேண்டிய தொகைகளிற்குரிய உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்வதன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ர்பிலும் மீளாய்வா ண்டின் திசெம்பர் 31 இல் உள்ள வாறு கிடைத்திருந்த ரூபா 1,973,908 மீதி தொடர்பி லும் தேவையான சான்று கள் கணக்காய்விற்குச் சம ர்ப்பிக்கப்படாமையால் அந் த மீதிகளின் சரியான தன் மையை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை. | | | | மூலம் வருமானங் களை இனங்காண்ப தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் அரசு டைமையாக்கப்பட்ட பொரு ட்களின் விற்பனையிலிரு ந்து வெகுமதியாளர்க ளிற்கும் திரண்ட நிதியத்தி ற்கும் ரூபா 5,870,700 செலுத்தப்பட்டிருந்தது. சுற்றிவளைப்புக்களில் ஈடு பட்டிருந்த உத்தியோகத் தர்கள் தொடர்பில் உரிய தகவல்கள் பேணிச் செல் லப்பட்டிருக்காமையால் உரித்தற்றவர்களிற்கு கொடுப்பனவுகள் மேற்கொ ள்ளப்பட்டுள்ளனவா, பெற வேண்டிய அரசாங்க வரு மானங்கள் இழக்கப்பட்டு ள்ளனவா என்பது குறித்து உறுதிப்படுத்த முடிந்திருக் கவில்லை. | 5,870,700 | சுற்றி வளைப்பு க்களிலும் வழக் குகளிலும் பங்கு பற்றியோரின் பெயர் பட்டியல் | ஆண்டொன்றில் ஏறத்தாழ 10 வழக் குகளின் வவுச்சர் களே சமர்ப்பிக்கப் படுகின்றமையா ல் தனியான பதிவேடு பேணப்படவில்லை ல. | சுற்றி வளைப்புக்க ளிலும் வழக்குகளி லும் பங்குபற்றியே ா ரின் விபரங்கள் உள்ளடங்கிய பதிவே டொன்று பேணப்படு தல் வேண்டும். |
| (இ) | தகவல்களை வழங்குவோ ருக்குச் செலுத்துவதற் கென ரூபா 425,683 பணிப்பாளர் நாயகத்திற் குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த தரப் பினர்களிற்கு அத்தொகை செலுத்தப்பட்டிருந்தமையை கணக்காய்வில் உறுதிப்படு த்த முடிந்திருக்கவில்லை. | 425,683 | தகவல்களை வழ ங்கியோரினதும் சுற்றிவளைப்புக்க ளில் பங்குபற்றி யோரினதும் பெயர் பட்டியல் | தகவல்களை வழ ங்குவோருக்குச் செலுத்துவதற்கெ கன பணிப்பாளர் நாயக த்திற்குச் செலுத்த ப்பட்டிருந்தது. | வெளிப்படை யாக தகவல்கள் பேணப் படுதல் வேண்டும். |
| (ஈ) | தற்போது எந்தளவு வழக் குகள் செயற்பாட்டில் உள்ளன என்றும் எந்தளவு வழக்குகள் செயற்படாதுள் ளன என்றும் உறுதியாக இனங்காணப்படக் கூடிய விதத்தில் உரியபடி நாள துவரையாக்கப்பட்ட அறிக் கைகள் பேணப்பட்டிருக்க வில்லை. | - | உரியபடி நாள துவரையாக்கப்பட்ட அறிக்கைகள் | எதிர்காலத்தில் சரியான அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழக்குகள் தொட ர்பான சகல தகவ ல்களையும் உள் ளடக்கிய நாளது வரையாக்கப் பட்ட அறிக்கைகள் பேணப் படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 13 மாவட்ட மீன்பிடி அலுவலகங்களினால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான வெளிப்படுத்தல் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிரக்கவில்லை. | - இயந்திர உபகரணங்களின் பட்டியல் | மாவட்ட மீன்பிடி அலுவலகங்களினால் வைத்திருக்கப்பட்டுள்ள பொருட் கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த திருகோணமலை அலுவலகத்தினால் மாத்திரம் தகவல் கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நிதியத்திற்கு உரித்தாகவுள்ள அனைத்துச் சொத்துக்களையும் இனங்காண்பதற்கு ஏற்ற விதத்தில் கணக்கீட்டுக் கொள்கைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய ரூபா 1,973,908 மீன் விற்பனை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்றங்களிலிருந்து இத் தொகையினை அறவிடுவதற்கு நீண்காலம் எடுப்பதே இதற்கான காரணமாகும். | நீதிமன்றங்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானங்களை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 19 96 இன் 2 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீரியல்வள சட்டம் | | | |
| (i) 46(4) ஆம் பிரிவு | இப்பிரிவின் பிரகாரம் மீன்கள் அல்லது வேறு நீரியல் வளங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற பணம் குறித்த நீதவான் நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், புலானாய்வுப் பிரிவினால் செயற்படுத்தப்பட்ட வழக்குகள் தொடர்பில் | இது தொடர்பில் அறிவிப்பதற்கு குறித்துக் கொள்ளகின்றேன். | ஏலத்திலிருந்து பெறப்படுகின்ற தொகைகள் நீதிமன்றங்களில் வைப்புச்செய்யப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்ட ஏலத்தி லிருந்து பெறப்பட்ட ரூபா 5,028,600 தொகை நீதவான் நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்படுவதற்குப் பதிலாக அன்றைய தினமே மீன்பிடித் திணைக்களத்தின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்க ப்பட்டிருந்தது. | | |
| (ii) | 49(5) ஆம் பிரிவு | • சட்ட விரோதமான நடவடி க்கைகளில் ஈடுபட்டிருந் தோருக்கு எதிராக தொடர ப்பட்டிருந்த வழக்குகள் தொடர்பான அறிக்கை களை பெற்றுக் கொள்வ தற்கு திணைக்களம் நடவ டிக்கை எடுத்திருக்கவி ல்லை. | தொடர்ச்சியாக மாதா ந்தக் கூட்டங்களில் உதவிப் பணிப்பாளர் கள் அறிவுறுத்தப்படு கின்றனர். | குறித்த வழக்கு அறிக்கைகளை பெற்றுக்கொள்வ தற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| | | • சுற்றி வளைப்புக்களில் பங்குபற்றிய உத்தியோகத் தர்களுக்கு வெகுமதிப் பணத்தை வழங்குதல் தாமதமின்றி செய்யப்பட வேண்டிய போதிலும், 2014, 2015, 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே 271, 348, 488, 427, 327 மற்றும் 604 வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதி லும், 2014, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளு க்காக எதுவித வெகுமதிப் பணமும் செலுத்தப்பட்டிரு க்கவில்லை. | வெகுமதியாளர்கள் வவுச்சர்களை சமர்ப் பிப்பதற்கு தாமதித்தி ருந்தமையால் இந்த நிலை ஏற்பட்டிருந் தது. | சுற்றி வளைப்பு க்களில் பங்கு பற்றிய உத்தி யோகத்தர்களுக் கு வெகுமதிப் பணத்தை தாம தமின்றி வழங் குதல் வேண் டும். |
| (iii) | 59(2) ஆம் பிரிவு | வெகுமதி நிதியத்தின் நிர் வாகம் தொடர்பில் பணிப்பா ளர் நாயகம் பொறுப்புக்கூற வேண்டிய போதிலும், மீன் பிடி மற்றும் நீரியல் வள ங்கள் திணைக்களத்தினால் 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட் டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டங்களில் வெகுமதி நிதியத்தின் செயற்பாடுகள் இனங்காணப்பட்டு பயனுள்ள வகையில் அவற்றை நிறைவேற்றுவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத் தில் உள்ளடக்குவ தற்கு குறித்துக் கொள்கின்றேன். | வெகுமதி நிதிய த்தின் செயற்பா டுகள் இனங்கா ணப்பட்டு பயனு ள்ள வகையில் அவற்றை நிறை வேற்றுவதற்கு தேவையான திட்டம் தயாரிக் கப்பட்டு அமுல் படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 59 (3) ஆம் பிரிவு மற்றும் 51 (4) ஆம் உபபிரிவு | வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் இதுவரை செலவுவைக்கப்படாத வருமானங்கள் மற்றும் கைப்பற்றப்பட்டு நீதிமன்றம் / கடற்படை மற்றும் மாவட்ட மீன்பிடி அலுவலகங்களில் காணப்படுகின்ற பொருட்கள் தொடர்பான தகவல்களை 2020 சனவரி 4 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டுமென பணிப்பாளர் நாயகத்தினால் உதவிப் பணிப்பாளர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது உரிய வகையில் செயற்படுத்தப் படாதிருந்ததுடன், பின்தொடர் நடவடிக்கைகளும் இடம் பெற்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இத் தகவல்களை மாதாந்தம் வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். | வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய வருமானங்கள், மாவட்ட மீன்பிடி அலுவலகங்களில் காணப்படுகின்ற பொருட்கள் தொடர்பான தகவல்கள் பேணிச் செல்லப்படுதல் வேண்டும். |
| (எ) | 59 (4) ஆம் பிரிவு | சட்டத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கும் தகவல்களை வழங்குவோர்களுக்கும் பொருத்தமானது என அவ்வப்போது பணிப்பாளர் கருதுகின்ற ஏதாவது பணத்தை வெகுமதிப் பணமாக வழங்குவதற்கான நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | சுற்றுவளைப்புச் செய்கின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் தகவல்களை வழங்குபவர்களை ஊக்குவிப்பதற்கென வெகுமதிப் பணத்தை வழங்கும் நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப்பிரமணாங்கள் 133(1) மற்றும் 2011 திசெம்பர் 23 ஆந் திகதிய டீ/எம்/ஏ/06 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கை | 2013 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை வெகுமதி நிதியம் சம்பந்தமான உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | நிதியம் சம்பந்தமாக உள்ளக கணக்காய்வை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 156(5) | நிதிப்பிரமாணத்திற்கு முரணாக மீன்பிடி வெகுமதி நிதியக் கணக்கு மற்றும் பெறவேண்டிய மீன் விற்பனை வருமானக் கணக்கு ஆகிய கணக்குகளிற்குரிய கொடுக்கல் வாங்கல் பதிவுகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் இரத்துச் செய்வதற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் பரிசோதிக்கப்பட்டு சிறு ஒப்பம் இடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், வழுக்களைத் திருத்துவதற்காக நாட்குறிப்புப் பதிவுகளை பயன்படுத்தாதும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் பரிசோதனை இன்றியும் பேரேட்டில் பதிவுகள் செய்யப்பட்டிருந்தன. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | திருத்துதல், பதிவழித்தலிற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் சிறு ஒப்பம் இடப்படுதல் வேண்டும். |
| (இ) | 2019 மார்ச் 05 ஆந் திகதிய DFAR/INF/ ஆம் இலக்க மீன்பிடி வெகுமதி நிதியப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம். | சுற்றிவளைப்பினை ஆரம்பிக்கையில் லொக் பதிவேட்டில் பதிவுசெய்து அதன் பிரதியினை கோவை செய்தல் வேண்டுமென்பதுடன், அந்த சுற்றிவளைப்பில் பங்குபற்றுகின்ற அனைத்து உத்தியோகத்தர்களினதும் விபரங்கள் உள்ளடக்கப்படுதலும் வேண்டும். இருப்பினும், NB 1391 ஆம் இலக்க வாகனத்தைப் பயன்படுத்தி புலனாய்வுப் பிரிவு 2019 யூலை 02 ஆந் திகதி மேற்கொண்டிருந்த சுற்றிவளைப்பு தொடர்பாக அவ்வாறான தகவல்களை உள்ளடக்கிய லொக் பதிவுகள் காணப்படாததுடன் அதன் பிரதி கோவைசெய்யப்பட்டிருக்கமை அவாதனிக்கப்பட்டது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | சுற்றி வளைப்பில் ஈடுபடுவோர்களது தகவல்களை உள்ளடக்கிய லொக் பதிவுகள் பேணப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,986,600 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 610,145 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 4,376,455 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் சுற்றிவளைப்புக்களில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களிற்கு ரூபா 4,547,647 படி செலுத்தப்பட்டிருந்த போதிலும், அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 8,924,103 இனால் அதிகரித்திருந்தமை இந்த முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முல்லைதீவு மாவட்ட மீன்பிடி அலவலகத்தினால் 2018 ஆம் ஆண்டில் தொடரப்பட்டிருந்த வழக்ககளின் எண்ணிக்கை 70 ஆனதுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் தீர்ப்பு வழங்கப்படாதிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 58 ஆகவும் 2019 சனவரி மாதத்தில் மாத்திரம் தொடரப்பட்டிருந்த வழக்ககளின் எண்ணிக்கை 8 ஆகவும் காணப்பட்டன. தடைசெய்யப்பட்ட வலைகள் டைய்னமைட் பாவனை என்பன இந்த வழக்குகளைத் தொடர்வதற்கு காரணமாகியிருந்ததுடன், இந்த மீனவர்களின் செயற்பாடுகள் காரணமாக மீன் வளம் அருகிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளமை தொடர்பில் முகாமைத்துவம் மீனவர்களை அறிவுறுத்தியிருந்த போதிலும், சட்ட விரோத செயற்பாடுகள் குறைவடைந்திருக்கவில்லை. பின் தொடர் நடவடிக்கைகளை விரிவுபடுத்தி மிகவும் பயனளிக்கும் வழிமுறையொன்றையும் பிரச்சார நடவடிக்கைகளையும் மேற்கொண்டு பயனுள்ள பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு கனவம் செலுத்தப்படுதல் வேண்டும். | இணங்க முடியாதுள்ளது. ஆண்டின் போது சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள மினவர்களை அறிவுறுத்துவதற்கான செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. | மீன் வளத்தினை பாதுகாப்பதற்கு ஏற்ற வழி முறைகளை தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முடிவடைந்த வழக்குகள் தொடர்பில் நீதிமன்றங்களில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தினை திணைக்களத் திற்கு துரிதமாக வரவழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பலவீனத்தை நீக்கிக் கொள்வதற்கு குறித்த உத்தி யோகத்தர்களிற்கு அறிவுரை வழங்குவதற்கு குறித்துக் கொள்கின்றேன். | வழக்குகளுடன் தொட ர்புடைய அறிக்கை களை முறையாக பேணுவதற்கும் பண த்தை வரவழைத்துக் கொள்வதற்கும் நட வடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 யூலை மாதம் அரசுடைமையாக்கப்பட்ட கடல் அட்டைகள் தனியார் ஏலத்தில் விற்பனை செய்வதற்காக குழுவினால் பத்திரிகை அறி வித்தல் வெளியிடப்பட்டது. இருப்பினும், ஏலம் இடம்பெறும் இடம் தொடர்பில் நிலவிய கருத்து வேறுபாடுகள் காரண மாக தலைமை அலுவலகத் தில் நடாத்துவதற்கு தீர்மானிக் கப்பட்டு 2 சந்தர்ப்பங்களில் ரூபா 116,860 செலவிடப்பட் டிருந்தது. | திணைக்களத்தில் களஞ்சிய வசதி இல்லாமையால் தனியார் நிறுவனமொன்றில் வைக்கப்ப ட்டிருந்தது. அவர்கள் விரும்பா மையால் தலைமை அலுவல கத்தில் ஏலத்தினை நடாத்து வதற்கு ஏற்பட்டிருந்தமை காரணமாக இரண்டு தடைவ கள் வெளியிடுவதற்கு நேர்ந்தி ருந்தது. | முகாமைத்துவத்தினா ல் பயனுள்ள தீர்மா னத்தை எடுப்பதற்கு செயற்படுதல் வேண் டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட சுற்றிவளைப்பு இலக்கு 655 ஆன போதிலும், ஏறத்தாழ 200 சுற்றிவளைப்புகள் அல்லது 31 சதவீதம் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் மாவட்ட மீன்பிடி அலுவலகங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் புலனாய்வுப் பிரிவுகள் குறித்த இலக்கினை அடைந்திருக்க வில்லை. | இந்த இலக்கினை தீர்மானிக் கையில் மிகைக் கணப்பீடு இடம்பெற்றுள்ளமை தெரிகின்றது. | முகாமைத்துவ திட்ட த்தின் பிரகாரம் இலக் குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |